# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 10 திங்கட்கிழமை 23.08.2024 கதிர் 292


பொய் சொல்லிக்கொண்டிராமல்

## சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருக

### சஜித், அனுரவுக்கு ரணில் சவால்

இனியும்மக்களுக்கு பொய்சொல்லிக்கொண்டிருக்காமல் சர்வதேச நாணய நிதியத்துடன் இணையமூலம்பகிரங்கமான கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு சவால் விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

புறக்கோட்டையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின்விசேட சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் ☞ 8

## தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளர் கட்சித் தாவல்

### அமைச்சர் டக்ளஸ் முன் ஈபிடியில் சேர்ந்தார்

தமிழ் மக்கள் கூட்டணியின்கிளிநொச்சிமாவட்ட அமைப்பாளரும்ஓய்வுபெற்ற அதிபருமான ஆறுமுகம் ஆலாலசுந்தரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்பாக ஈபிடிபி கட்சியில் சேர்ந்தார்.

'நாடாளுமன்றில் தோழர் 30' நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள தனியார் விருத்தக மண்டபத்தில் இடம்பெற்றது.

1994 நாடாளு மன்றத்துக்கு தெரிவான அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் 30 வருட தொடர்ச்சியான சேவையை பாராட்டி இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மாவட்டத்தின் பலபகுதிகளிலிருந்தும்பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்தநிகழ்வில்வைத்தே தமிழ்மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அமைப்பாளர் கட்சி தாவினார். அவருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாலை அணிவித்து கௌரவப்படுத்தினார். எதிர்வரும்தேர்தலில்ரணில் விக்ரமசிங்கவைவெற்றிபெறவைத்து, தொடர்ந்து மக்களுக்கு சேவை செய்யவுள்ளார் என்று தெரிவித்தார் ஆலாலசுந்தரம்.(113)

## இனிது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம்,திருநெல்வேலியில் தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) நேற்று தனது தேர்தல் அலுவலகத்தைத் திறந்தது. திருநெல்வேலிச் சந்திக்கு மிக அருகில் பலாலி வீதியில் உள்ள பழைய கடைக் கட்டடம் ஒன்றே தேர்தல் அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது.

ஜேவிபியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் இரத்நாயக்க இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார். கட்சியின்யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஜேவிபியின் தேர்தல் அறிக்கை அனேகமாக இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. 'பணக்கார நாடு; அழகிய வாழ்வு' என்ற தலைப்பில் அது வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அந்த அறிக்கையில் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்கின்றன கட்சி வட்டாரங்கள். புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு என்பது தான் அதிகபட்சமாக ☞ 2

விவசாயக் கடன்கள் நீக்கம்

# உரமூடை ரூ. 5 ஆயிரத்துக்கு சஜித் பிரேமதாஸ வாக்குறுதி

### எரிபொருள் மானியமும் கிடைக்குமாம்





விவசாயிகளுக்கு தேவையான சிறந்த தரத்திலான 50 கிலோ கிராம் எடையுள்ள உரம் மூடை ஒன்றை 5,000 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ☞ 2

## 2 சுகாதார பரிசோதகர்கள் நீரில்மூழ்கி நேற்றுச் சாவு

### நீராடச் சென்றபோது அவலம்

களுத்துறை,அவிட்டாவ,இஹலகந்த பிரதேசத்தில் எத்தாவெடுனுவெல என்ற இடத்தில் நீராடச் சென்ற இரு சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மொரட்டுவைபிரதேசத்தைச்சேர்ந்த டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள் மற்றும்4பொதுச்சுகாதாரபரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் அந்த இடத்தில் நீராடச் சென்றுள்ளனர். அப்போது 2 பொது சுகாதார பரிசோதகர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகத்தில்கடமையாற்றிய எஸ்.கௌதம் மற்றும் எகொட உயன சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்த எஸ். ஹர்ஷநாத்ஆகியோரேஉயிரிழந்தனர்.

சடலங்களின் உடற்கூறாய்வு இன்றுநடைபெறவுள்ளது. இத்தேபான பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நடந்ததைப் பற்றியே சிந்திக்காமல் அடுத்து என்ன என தயாராவோம்

### யாழ்ப்பாணத்தில் தி.க. தலைவர் அறிவுரை

நடந்தவற்றை பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்காமல், அடுத்து எமது உரிமைகளை பெறுவதற்காக எப்படித்தயாராவதுஎன்று சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி. யாழ்ப்பாணம்வந்துள்ள அவர், முன்னாள் ☞ 8

## தமிழ் அரசுக் கட்சியின் முடிவுக்கு தமிழர்கள் காத்திருக்க வேண்டும்

### சுமந்திரன் எம்.பி. திருகோணமலையில் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்) - மூன்று பிரதான வேட்பாளர்களையும் சமதூரத்தில் வைத்து பேச்சில் ஈடுபடுகிறோம், அவர்களில் யாரை ஆதரிப்பதுஎன்றுதமிழ்அரசுக் கட்சி முடிவு செய்து அறிவிக்கும்வரைதமிழ் மக்கள் பொறுமை காக்கவேண்டும் என்று கோரினார் - நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் திருகோணமலையில் ☞ 8

## காத்திரமான பேச்சுக்கு வேட்பாளர்கள் அழைத்தால் பரிசீலிக்க நாம் தயார்

### ஜனநாயகக் கூட்டணி சார்பில் சுரேஸ் அறிவிப்பு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுக்க அழைத்தால் அது தொடர்பில்கூடிஆராய்ந்து முடிவுகளைஎடுக்கத்தாம் தயார்என்றுஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணி அறிவித்துள்ளது.

ஜனநாயக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட ☞ 2

தொடருந்துகள் மூலமாக

## கொழும்பு குப்பைகள் புத்தளத்திற்கு முதல் தடவையாக வந்து சேர்ந்தன

### எதிர்த்து மக்கள் போராட்டம்

கொழும்புமாநகரின் குப்பைகளை தொடருந்தில் எடுத்துச் சென்று புத்தளத்தில் கொட்டுவதற்கான நடவடிக்கைகள் பணிகள் நேற்றுத் தொடங்கின. முதல் தொகுதி குப்பைகள் தொடருந்தில் எடுத்துச் செல்லப்பட்டுபுத்தளத்தில் போடப்பட்டன.

வனவாசலை குப்பை பொதி செய்யும் நிலையத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகள், புத்தளம் அருவக்காடு குப்பை மேட்டிற்கு கொண்டு ☞ 2

## அரியநேந்திரன் சர்வஜன வாக்கெடுப்பை கேட்கத் தவறின் நாம் எதிர்க்கவேண்டும்

### முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் காட்டம்

சர்வஜனவாக்கெடுப்பு தேவைஎனதமிழ்பொது வேட்பாளர் நேரடியாக கேட்க தவறின், பொது வேட்பாளருக்கு எதிராக நாம்செயற்படவேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

தமிழ் பொது ☞ 8

## ஜனாதிபதியாக போட்டியிடும் தகுதி மலையகத் தமிழனுக்கும் உண்டு

### அதை நிரூபிக்கவே வேட்பாளரானேன் - திலகராஜ்

38 பேர் போட்டியிடுகின்ற ஜனாதிபதி தேர்தலில் முதல் மலையகத்தமிழனாக நானும் நிற்பேன் எங்கள் மக்களுக்கும் அந்த தகுதி உள்ளது என சொல்லவருவதேஎனதுமுதலாவது வெற்றி என ஜனாதிபதி வேட்பாளரும் நுவரெலியாமாவட்டமுன்னாள் நாடாளுமன்ற ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதிலிருக்கக்கூடியது என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரித்தவர்கள். போரின்போது படைகளுக்கு ஆள்திரட்டிக்கொடுத்து தமிழர்களின் பேரழிவுக்கு முழு ஆதரவு வழங்கியவர்கள் என்கிற கோபம் ஜேவிபி மீது தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அதனால் அவர்களுக்கு இங்கு அதிக வாக்குகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே தெரிகின்றன. இருந்தாலும் தமிழ் மக்களின் வாக்குகள் இன்றித் தம்மால் வெற்றியைப் பெறமுடியாது என்று உணர்ந்திருக்கும் ஜேவிபி எவ்வளவு தூரம் தமிழ் மக்களுக்காக விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்பது அதன் தேர்தல் அறிக்கையில் தெரிந்துவிடப்போகின்றது.

...............

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதற்காக சாராயக் கடை அனுமதிப் பத்திரங்களை ரணில் விக்கிரமசிங்க வழங்கிவருகிறார் என்று தேர்தல் மேடைகள் தோறும் பரப்புரை செய்துவருகிறார் சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர. அண்மையில் அப்படி அனுமதிப் பத்திரங்களை வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களையும் அவர் வெளியிட்டார். எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் சாராயக்கடைக்கான அனுமதியை நேரடியாகத் தமது பெயரில் பெறுவதில்லை.

தங்கள் பினாமிகளின் பெயரில் பெறுகிறார்கள் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தைகொளுத்தவிலைக்கு யாராவது பெரிய முதலாளிகளுக்கு விற்றுவிடுகிறார்கள். அப்படியிருந்தும் யார் யாருக்கெல்லாம் அவை வழங்கப்பட்டன என்கிற பெயர் விவரங்களைவெளியிட்டுபரபரப்பை ஏற்படுத்தி வருகிறார் அவர். அண்மையில் மலையகத்தைச் சேர்ந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் தொலைக்காட்சிவிவாதத்தின்போதுகைகலப்பு ஏற்படுவதற்கும்இதுவேகாரணமாக இருந்தது.

ஒருவர் மற்றவரைப் பார்த்து "பார் குமார்" என்று கூற மற்றவர் "குடுக்காரன்" என்று கூறப் போய்த்தான் எழுந்து ஆளுக்காள் சட்டையைப் பிடித்து அடிபடும் நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட பரபரப்பை ஏற்படுத்திய தயாசிறீ தற்போது சொல்லியிருக்கும் தகவல், அண்மையில் ரணில் பக்கம் தாவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடனான 'டீல்'கள் அனைத்தும் வெளிநாடுகளிலேயே முடிக்கப்பட்டு பணமும் அங்கேயே கைமாறிவிட்டன என்பதுதான்.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என மூவருக்குமான 'டீல்'கள் வெளிநாடுகளிலேயே முடிக்கப்பட்டனவாம். முதலாமவருக்கான 'டீல்' சிங்கப்பூரில் முடிக்கப்பட்டதாம். அவர் காலையில் அங்கு போய் மாலையில் திரும்பி வந்தாராம். மற்ற இருவருக்குமான 'டீல்'கள் தாய்லாந்தில் முடிக்கப்பட்டனவாம். பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்கியுள்ள நாடுகளில் ஒன்று தாய்லாந்து என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று.

நம்முடைய ஆட்களிலும் யார் யார் எல்லாம் இப்படிக் குறுகிய வெளிநாட்டுப் பயணங்களை அண்மையில் மேற்கொண்டார்கள், போய் வந்த பின்னர் அவர்களின் கதைகள் எப்படி மாறியிருக்கின்றன என்பதில் ஒரு கண் வைக்கவேண்டியதுதான்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## உரமூடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் பதினான்காவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முற்பகல் பொலன்னறுவை, ஹிங்குராங்கொட நகரில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாய இரசாயன மருந்துகள், உரம் என்பனவற்றுக்கு ஒழுங்கு முறையான விலை நிர்ணயத்தை மேற்கொண்டு, இருட்டடிப்புச் செய்கின்ற வர்த்தகர்களின் விலை அதிகரிப்புக்கு இடமளிக்காது, மக்களால் ஏற்றுக்கொள்ள முடியுமான விலைக்கு பொருட்கள் வழங்கப்படும். உரவினியோகத்தின்போது கமநல சேவைகள் மத்திய நிலையத்தை மையமாகக் கொண்டு வெளிப்படை தன்மையுடன் இந்த வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கியூ.ஆர். (QR Code) முறையை மையப்படுத்தி விவசாயிகளுக்கு, மீன்பிடித் தொழிலாளர்களுக்கு, முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு, பாடசாலை போக்குவரத்து சேவையாளர்களுக்கு, ஆலையுரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா அச்சுறுத்தல், உர மோசடி, நானோ உர மோசடி போன்றவற்றின் ஊடாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தம்மிடம் உள்ள பணத்தைக் கொண்டும் தங்க ஆபரணங்களை அடகு வைத்து, கிடைக்கின்ற பணத்தைகொண்டும் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு கடந்த காலங்களில் அடிக்கு மேல் அடி விழுந்து அழுத்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். அவ்வாறு அழுத்தங்களுக்கு உள்ளாகி மூன்று வேலையும் உணவு உண்ண முடியாமல் இருக்கின்ற விவசாயிகளின் விவசாய கடனை இரத்து செய்வோம்.

அத்தோடு விவசாயிகளின் விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான நிர்ணய விலை ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். மோசடியான முறையில் விவசாயிகளையும் நுகர்வோர்களையும் பாதிக்கின்ற ஏற்பாடுகளுக்கு இடமளிக்கமுடியாது. நுகர்வோருக்கும் சாதாரண விலையில் பொருள் கிடைப்பதோடு நெல்லுக்கும் உயர்ந்த நிர்ணய விலை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுப்பேன்

பிணைகள் இன்றி அரச வங்கிகளில் கோடிக்கணக்கான தொகையை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ள செல்வந்தர்கள், ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களோடு நட்புறவைப் பேணி அந்தக் கடன் தொகைகளை இரத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் விவசாயிகளின் கடன்களை இரத்து செய்ய ஆளும் தரப்பால் முடியாமல் போயுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நாட்டுக்கு உணவளிக்கின்ற விவசாயிகளுக்கு நன்றி உணர்வோடு இந்தக் கடன்களை இரத்து செய்வோம். இந்த சிறிய மனிதர்களின் ஜனாதிபதி என்ற வகையில் அந்தப் பணியை நிறைவேற்றுவேன். நாட்டுக்கு உணவு அளிக்கின்ற விவசாயிகளுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பல மாவட்டங்களில் பரம்பரையாக காணப்பட்ட விவசாய காணிகள் இல்லாமல் போயிருக்கின்றது. பல தசாப்தங்களாக எல்லை கற்களை இட்டு விவசாயம் செய்த காணிகள் அவர்களுக்கு இல்லாமல் போயிருக்கின்றது. அந்தக் காணிகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதோடு, இந்த நாட்டின் இயற்கை வளங்கள், வனவளங்கள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கி மக்கள் மயப்படுத்தப்பட்ட வனவளங்களாக பாதுகாத்து, விவசாய நிலங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்போம். சேதமடைகின்ற விவசாயிகளின் பயிர்களுக்கு முறையான காப்புறுதி திட்டம் ஒன்றையும் ஏற்படுத்துவதோடு, காட்டு யானை தாக்குதல்களையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது வேலை செய்ய முடியாத தலைவர்கள் இருக்கின்றபோதும், ஐக்கிய மக்கள் சக்தி 76 வருட ஜனநாயக காலத்தில் பிரபஞ்சம் மூச்சு போன்ற வேலை திட்டங்களின் ஊடாக பில்லியன் கணக்கான வேலைகளை முன்னெடுத்துள்ளோம். இப்பொழுது மக்கள் அபிப்பிராயத்திற்காக வந்திருக்கின்றோம். இனிய தலைவர்கள் நாட்டைச் சுற்றி வெற்றிப் பேச்சுக்களோடு சென்ற போதும் நாம் நாட்டுக்கு சேவை செய்திருக்கின்றோம். வெற்றிப் பேச்சுக்களோடும் வெறும் காட்சிப்படுத்தல்களோடு மாத்திரம் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டி காட்டினார் - என்றார்.

## காத்திரமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தமிழ் பொது வேட்பாளரை வெல்ல வைப்பதற்கான நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விடயங்களை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று ஆராயப்பட்டது. ஏற்கனவே வடக்கு - கிழக்கில் பரப்புரை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல ஜனநாய தமிழ் தேசியக் கூட்டனி தனது முழுமையான பங்களிப்பை வழங்குவது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட ரீதியான முகவர்களை நியமிக்க வேண்டியுள்ளது. மாவட்ட ரீதியாக தேர்தல் அலுவலகங்களை திறக்கப் வேண்டியுள்ளது. அதனை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. இது தொடபில் யாழ்ப்பாணத்தில் சிவில் அமைப்புக்களுடன் கலந்துரையாடி பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

என்ன கொள்கைகளுக்காக பொதுவேட்பாளரைநிறுத்தினோமோ அந்தக் கொள்கைகளை வெற்றியடையச் செய்யும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். நேற்றைய கூட்டத்தில் ஆரோக்கியமான கருத்து பகிர்வு இடம்பெற்றது. எமது முடிவுகள் தொடர்பாக சிவில் அமைப்புகளுடன் பேசி பொதுவான ஒரு முடிவை எடுத்து அதனை முன்னெடுத்து செல்வோம்.

இதில் அங்கத்துவம் வகிக்கும் சில கட்சிகள் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களை சந்தித்துள்ளார்கள். இதன்போது தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையும், தென்பகுதி வேட்பாளரை நம்பி பல தடவை வாக்களித்து இருக்கின்றோம் என்பதையும் ஆனாலும் எமது நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள். ஜனாதிபதியாக வந்தால் என்ன செய்வோம் என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 13ஆவது திருத்தை நடைமுறைப் படுத்துவதாகவும் கூறியுள்ளார்கள். எங்களது விடயங்களையும் பேசியவர்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நாம் ஒன்று சேர்ந்து பொதுவேட்பாளருக்கு தொடந்தும் வாக்கு சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுக்கு வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் எனத் தெரிவித்தார்.(100)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டுள்ளது.

756 இல இன்ஜினை கொண்ட தொடருந்தில் 20 கொள்கலன்களில் இந்தக் குப்பைகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. குப்பைகளை ஏற்றிய கொள்கலன்கள் வனவாசலையில் இருந்து புத்தளம் வரை சென்று அங்கிருந்து அருவக்காடு குப்பை மேட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு கொழும்பிலிருந்து குப்பைகளைக் புத்தளத்திற்கு கொண்டுவரும் ஆளும் தரப்பின் திட்டத்தை உடனடியாகக் கைவிடவேண்டும் என கோரி சனிக்கிழமை நள்ளிரவு கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

சுமார் இரண்டு மணி நேரம் புத்தளம்-நூர்நகர் ரயில் நிலையத்திற்கு முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர் இஷாம் மரிக்காரும் சில இளைஞர்களும் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பிலிருந்து குப்பைகளை ஏற்றிய தனித் தொடருந்து புத்தளம் அருவக்காடு -சேராக்குளி பகுதிக்கு ஞாயிறு அதிகாலை வருகை தரவுள்ளதாக க்ளீன் புத்தளம் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தத் திட்டத்தை உடனடியாக கைவிடுமாறு கோரி 'சந்ததிகளை காக்கும் சரித்திரப் போராட்டம்' எனும் தலைப்பில் புத்தளத்தில் வாழும் மூவின மக்களும் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்ததுடன், தொடர்ச்சியாக சத்தியக்கிரக போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

மக்களின் எதிர்ப்புக் கோஷங்களுக்கு மத்தியில், அரசாங்கம் அருவக்காடு, பகுதியில் திண்மக்கழிவு அகற்றும் திட்டத்தின் கீழ் நிர்மாணப்பணிகளைப் பூர்த்தி செய்து அதன் பணிகளையும் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

குப்பைக்கு எதிராக புத்தளத்தில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது சிலர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராகவும், இந்த திட்டத்திற்கு எதிராகவும் வழக்குகளும் நீதிமன்றில் நிலுவையில் உள்ளது எனவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

நீதிமன்றத்தில் வழக்கொன்று நிலுவையில் இருக்கின்ற

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# நாமலின் மலினமான பேச்சுகளுக்கு விக்கியும் பொறுப்பேற்க வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. சாட்டை

நாமல் ராஜபக்சவின் மலினமான பேச்சுக்களுக்கு விக்னேஸ்வரனும் முழுப்பொறுப்பை ஏற்கவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தெளிவூட்டும் துண்டுப்பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டவேளை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில் -

75 வருடங்களாக தமிழருக்கு உரிமை வழங்க மாட்டோம் என்று பேரினவாதிகள் கூறி வருகின்றார்கள். குறிப்பாக பேரினவாதிகள் சிங்கள மக்களுக்கு இவ்வாறான கருத்துக்களை கூறி வருகிறார்கள். அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது ஒரு பௌத்த நாடு. சிங்கள நாடு. இதை பேணிப் பாதுகாப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அது மட்டுமன்றி வட கிழக்கில் 1000 பௌத்த விகாரை அமைப்பதாகவே கூறி வருகின்றனர்.

சஜீத் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனமும் அவ்வாறு தான் இருந்திருக்கின்றது. சஜீத் பிரேமதாஸ, புத்தசாசன அமைச்சராக இருந்தபோது நீராவியடி பிள்ளையார் ஆலய முற்றத்தில் ஒரு பௌத்த பிக்குவின் சவம் எரிக்கப்பட்டது. இவ்விடயம் அமைச்சரின் ஆலோசனை வழிகாட்டலுடன் தான் நடைபெற்றது. இது தவிர அவரது காலத்தில் தான் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் சட்டவிரோத விகாரை கூட கட்டப்பட்டிருந்தது.

அநுரகுமார திசாநாயக்கவை பற்றி கூறத் தேவையில்லை.மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்து ஒழிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திரட்டி இராணுவத்துக்கு கொடுத்திருந்த ஒரு கொலைவெறி பிடித்த குழு ஒன்றின் தலைமைச்சக்தியாக அவர் இருக்கின்றார். அது மாத்திரமன்றி வடக்கு கிழக்கினை வழக்கு தாக்கல் செய்து பிரித்த இனவெறியர்கள் இவர்கள். இவர்கள் எல்லோரது நிலைப்பாடுகளும் இவைதான். இதில் நாமல் ராஜபக்ஷ விதிவிலக்கானவர் அல்லர். இதனால்தான் இவர்களிடம் தமிழருக்கு உரிமை கொடுக்கப் போகின்றோம் என கூறினால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதி உங்களின் சிங்கள மக்களுக்கு சொல்லுங்கள். இந்தத் தோல்வியடைந்த ஒற்றையாட்சியைஒழிக்கப்போகின்றோம்.சமஸ்டியை கொண்டுவரப் போகின்றோம் என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தி வாருங்கள் என நாங்கள் கூறுவது நம்பிக்கைக்காக தான்.

இது தவிர இன்று நேற்று முளைத்த காளானாக இருக்கின்ற இந்த நாமல் ராஜபக்ஷவுக்கு சமீப காலமாக பல கருத்துக்களை குறிப்பிடும் துணிச்சலை கொடுத்தது சுமந்திரன், சம்பந்தன், அரியநேத்திரன், சிறிதரன் உட்பட இந்த தமிழரசு கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிட்டு 2010, 2015, 2020 ஆண்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்அனைவரும்பொறுப்பேற்கவேண்டும். விக்னேஸ்வரனும் முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டும். ஏனெனில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு குற்றவியல் விசாரணைகளை நடத்துவதற்கான அதிகாரங்கள் இல்லை என்பது நன்றாக தெரிந்த பிறகும் தொடர்ச்சியாக உள்ளக விசாரணைக்குள் பொறுப்புக்கூறலை முடக்கி சர்வதேச விசாரணை வேண்டாம். இனப்படுகொலையாளிகளை பாதுகாப்பதற்காக மேற்கூறியவர்கள் ஒவ்வொருவரும் கூட்டாக செயற்பட்டு வந்தவர்கள். குறிப்பாக இந்த இனப்படுகொலையாளி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆண்டு பதவியேற்ற பிறகு ஜனாதிபதியாக இருக்கின்றபோது 2021 ஆண்டு மார்ச் மாதம் இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானம் வந்த நிலையில் அந்த சந்தர்ப்பத்தில் வந்து பொறுப்புக்கூறல் செயற்பாட்டை மனித உரிமை பேரவையில் இருந்து வெளியே எடுத்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என முயற்சியை எங்கள் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட எங்களது கட்சி முக்கியஸ்தர்கள் முன்னெடுக்கின்றபோது இவர்கள் (தமிழ் அரசுக் கட்சியினர்) கடிதம் எழுதி ஜெனிவா மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்படவுள்ள விடயம் எந்த வடிவத்திலேனும் நிறைவேற்றப்பட வேண்டும். ஏனெனில் இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் தீர்மானம் ஒன்று தேவை என்பதாகும்.

இவ்வாறாக இவர்கள் கொடுத்த ஆதரவு தான் நாமல் ராஜபக்ஷ போன்றவர்களுக்கு திமிரை கொடுத்திருக்கின்றது. அது மட்டுமன்றி நாமல் ராஜபக்ஷ சீன சார்பானவர் என்பதனால் ஊடகங்கள் அவரது கருத்துக்களை பெரிதுபடுத்துகின்றன. அது மட்டுமன்றி 2010ஆம் ஆண்டு தமிழரசு கட்சியினர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்க சொன்னதை மறக்க முடியுமா? ஆகவே எமது மக்கள் இவ்வாறானவர்களை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.



1920ஆம்ஆண்டுமுஸ்லிம்களுக்குஎதிரானபடுகொலையில் ஈடுபட்டமைக்காகபிரித்தானியாவில்வழக்குபோடப்பட்டிருந்தது. அந்த வழக்கில் இலங்கையில் இருந்து சென்ற தமிழ் தலைவர்கள் வாதாடி அந்த சிங்கள தலைவர்களை மீட்டு கொண்டுவந்தபோது அந்த நன்றிக்கடனுக்காக கொழும்புக்கு வந்திறங்கிய இந்த தமிழ் தலைவர்களை குதிரை வண்டிலில் ஏற்றி குதிரைகளை கழற்றிவிட்டு பண்டாரநாயக்க உள்ளிட்ட சிங்கள தலைவர்கள் குதிரைகள் போன்று தோளில் வைத்து வண்டிகளை இழுத்து சென்றார்கள். அந்தளவிற்கு தமிழர்களுக்குசிங்களதலைவர்கள்கடமைப்பட்டுஇருந்தார்கள். பயந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களை கொன்று குவித்தவர்களை தமிழ் தலைவர்கள் என்று சொல்கின்ற அடிமைகள் ஜெனிவா வரை சென்று சர்வதேச விசாரணையின்றி மீட்கப்பட்டிருக்கின்ற நிலையில் இன்று எம்மை சிங்கள மக்கள் துரத்தி துரத்தி அடிக்கின்றார்கள்.

எனவே எமது மக்கள் சிந்திக்க வேண்டும். எமது வாக்குகளை பெற இன்று பொது வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றார்களா? இவ்வாறானவர்கள் தான் அரசுடன் பேரம் பேசுவார்களா? என்பதை எமது மக்கள் நன்றாக சிந்திக்க வேண்டும் என்றார். (05)

# கிளி. பெரியகுளம் காணிகளில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சட்டவிரோத மணல் அகழ்வு



கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத் துக்குட்பட்ட பெரியகுளம் கனகராய னாற்றுப் பகுதியில் உள்ள பல ஏக்கர் காணி களில் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்போடு சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிகளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் தொடர்ந்து மணல் அகழ்வுப் பணிகள் இடம் பெறுகின்றன என பொதுமக்கள் பல்வேறு முறைப்பாடுகளை அளித்து வருகின்றனர்.

இந்த பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டபோதும் இதுவரை மணல் அகழ்வை கட்டுப்படுத்த பொலிஸார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிகளை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் முரளிதரன் மற்றும் பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன் ஆகியோர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (05)

# மன்னார் வைத்தியசாலையில் உயிரிழந்த சிந்துஜாவின் கணவர் தவறானமுடிவெடுத்து தானும்: உயிர் மாய்ப்பு

மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த இளம்தாய் சிந்துஜாவின் 26 வயதுடைய கணவர் வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் சனிக்கிழமை இரவு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

மன்னார் வைத்தியசாலையில் அண்மையில் இளம்தாய் ஒருவர் குழந்தையை பிரசவித்த நிலையில் சில நாள்களின் பின்னர் இரத்தப்போக்கால் மீண்டும் மன்னார் வைத்தியசாலைக்கு சென்ற போது அங்கு உயிரிழந்தமை பெரும் சர்ச்சை ஏற்படுத்தியிருந்தது.

சிந்துஜாவின் கணவர் தனது சொந்த ஊரான வவுனியா பனிக்கர் புளியங்குளத்தில் வசித்து வந்திருந்தார்.

இந்நிலையில் சனிக்கிழமை அவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# அஞ்சல் பணியாளர்களின் விடுமுறை உடன் அமுலாகும் வகையில் இரத்து

ஜனாதிபதித்தேர்தல்நிறைவடையும்வரையில்சகல அஞ்சல் பணியாளர்களின் விடுமுறைகளும் உடன் அமுலாகும் வகையில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை கருத்திற்கொண்டு அவர்களின் விடுமுறையை இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும், அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்க வேண்டுமாயின் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி அஞ்சல்மா மா அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.(05)

# மஹியங்கனையில் புதையல் தோண்டிய மூவர் கைது

புதையல் தோண்டிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர். சியம்பலாண்டுவ மற்றும் மஹியங்கனை ஆகிய பகுதிகளை சேர்ந்த 30 வயதுடைய ஒருவரும் 32 வயதுடைய இருவரும் என மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை கெசல்பொத்த பகுதியில் புதையல் தோண்டுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, சம்பவ இடத்துக்கு விரைந்த மஹியங்கனை பொலிஸ் குழுவொன்று புதையல் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்த மூவரை கைது செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் சில உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நேற்று மஹியங்கனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடனடிக் கவனம் தேவை

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையிலான போர் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இதனால் இஸ்ரேலில் 48 மணி நேர அவசர கால நிலை நேற்று அறிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் இந்தப் போர் பதற்றம் காரணமாக உலக சந்தையில் எரிபொருள் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான மோதல் நிலைமை விரைவில் முடிவுக்கு வராமல் சில காலம் தொடர்ந்தால், இந்த நிலை மேலும் மோசமடையலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹிஸ்புல்லாவுக்கு ஆதரவளிக்கும் ஏனைய அமைப்புகளும் எரிபொருள் போக்குவரத்து வழித்தடங்களைத் தடுத்தால் அது உலகில் எரிபொருள் விலை உயர்வை மேலும் பாதிக்கும்.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளின் மோதல்களினால் இதுவரையில் எமது நாட்டில் எரிபொருளின் விலையில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என இலங்கை பெற்றோலிய சட்ட கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் எதிர்காலத்தில் உருவாகும் நிலைமைகளைப் பொறுத்து பாதிப்பு ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலமைகளை எதிர்கொள்வதற்காக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பரிந்துரைகளை வழங்க, போர்ப் பதற்றத்தின் தொடக்கத்திலேயே மூன்று குழுக்களை அமைத்ததாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால், அந்தக் குழுக்கள் என்ன செய்தன? அவற்றின் பரிந்துரைகள் என்ன? என்பது பற்றிய தகவல்கள் எதுவும் பின்னர் வெளியிடப்படவில்லை.

அரசுத் தலைவர் தேர்தல் மும்முரத்தில் இதுபோன் விடயங்களின் மீது கவனம் குறைவாக இருக்கும் நேரத்தில் எதிர்பொருள் விலைகள் அதிகரித்தால் அதனைச் சமாளிக்க முடியாது மீண்டும் நெருக்கடிகள் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. எனவே இது விடயத்தில் ஆளும் தரப்புத் தீவிரமாக அவதானிப்பதுடன் தேவையான முன்னேற்றபாடுகளைச் செய்து வைப்பதும் அவசியம்.

சர்வதேசச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தாலும், இலங்கையிடம் ஏற்கனவே கைவசம் இருக்கும் எரிபொருள் இருப்பு மற்றும் வழங்கப்பட்டிருக்கக்கூடிய கொள்வனவுக் கட்டளைகளின் அடிப்படையில் தேர்தல் காலத்திற்குள் இங்கு எரிபொருள் விலை அதிகரிப்பு இடம்பெறாது போகலாம். தேர்தல் முடிந்ததும் புதிதாகப் பதவிக்கு வருபவர் எரிபொருள் விலை அதிகரிப்பால் எக்கேடும் கெட்டும் என்கிற வகையில் செயற்படாமல், மக்களின் நலன் கருதி இந்த விடயத்தில் போதிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள் இருதரப்பினரும் இது தொடர்பில் உடனடியாகத் தீவிர அக்கறை செலுத்துவது அவசியம்.


### வங்குரோத்தில் வங்கதேசம்:

# பொருளாதார நெருக்கடியால் கரையும் அந்நிய செலாவணி

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்து வரும் நிலையில் இருந்த பங்களாதேஷ் மீண்டும் பெரும் பொருளாதர வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அதுவே ஆசியாவில் எழுச்சி பெறும் புலிப் பொருளாதாரமாக (Growing Tiger Economy) முன்பு கருதப்பட்டது.

இன்னமும் பங்களாதேஷில் தொடர்ந்து பதற்றம் நிலவிவருகிறது. தொடர்போராட்டங்களுக்கு மத்தியில் பல இடங்களில் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது.




வங்கதேசம் கடும் பொருளாதார நெருக்கடியை சந்திக்க தொடங்கி இருப்பது சிக்கல்களை இன்னும் தீவிரமாக்கி இருக்கிறது. இதுதொடர்பாக பங்களாதேஷ் புள்ளியியல் திணைக்களம் (Department of Statistics) அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டொலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், தற்போதய மாபெரும் பிரச்சினையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருக்கும் எனத் தோன்றுகிறது என்று அது தெரிவித்துள்ளது.

அதன்படி நுகர்வோர் விலைக் குறியீடு (Consumer Price Index) என்பது ஜூலை மாதம் 11.66 சதவீத பணவீக்கத்தை தொட்டுள்ளது. இது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகம். குறிப்பாக உணவு பணவீக்கம் என்பது 13 ஆண்டு இல்லாத அளவுக்கு 14 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### பெரும் பணவீக்கம்:

வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டொலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், தற்போதய மாபெரும் பிரச்சினையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருக்கும்.

மாணவர் போராட்டங்களால் தற்போது 40 பில்லியன் டொலர் வரையில் அந்நாட்டின் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது எனக் கணிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைந்து ஒரு ஆபத்தான நிலையில் உள்ளவேளையில் அந்நாட்டின் அரசியலில் ஏற்பட்டு உள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை அந்நாட்டு தொழிலதிபர்களுக்குக் கொடுத்துள்ளது.

இந்தப் பணவீக்கத்துக்கு பங்களாதேஷில் நிலவும் நிச்சயமற்ற தன்மைதான் காரணம். மாணவர்களின் தொடர் போராட்டம் என்பது வங்கதேசத்தை முழுமையாகப் பாதித்தது. மேலும் பங்களாதேஷ் மத்திய வங்கியின் தரவுப்படி ஜூலை 31 அந்நிய செலாவணி கையிருப்பு 20.48 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியது.

இது முந்தைய மாதமான ஜூன் மாதத்தில் 21.78 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. ஒரு மாதத்தில் சுமார் 1.3 பில்லியனுக்கும் அதிக அமெரிக்க டொலர் குறைந்துள்ளது.

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர் போராட்டத்தால் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். அதன்பிறகு இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும்கூட பல இடங்களில் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது.

இந்நிலையில் பங்களாதேஷ் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கத் தொடங்கி உள்ளது. பணவீக்கம் அதிகரிப்பதோடு, அந்நிய செலாவணி கையிருப்பு சரியத் தொடங்கி உள்ளது. இந்த நிலை தொடரும்பட்சத்தில் விரைவில் அந்த நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லவும் வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இடஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர்கள் போராட்டம் என்பது கடந்த ஜூலை மாதம் தொடங்கியது. ஒரு மாதத்தை கடந்தும் போராட்டம் தொடர்ந்தது. இதையடுத்து ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்து இந்திய நாட்டில் தஞ்சமடைந்துள்ளார். இதையடுத்து இடைக்கால அரசு அமைந்துள்ளது.

இந்த அரசுக்குத் தலைவராக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.

### இந்துக்களின் அவலம் :

ஆனாலும் தொடர்ந்து ஆங்காங்கே போராட்டம் நடந்து வருகிறது. மாணவர்கள் போராட்டத்தை கைவிட்ட நிலையில் ஆங்காங்கே சிறுபான்மையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடங்கி உள்ளன.

இதனால் ஏழு லட்சம் இந்துக்கள் டாக்கா உள்பட இரு இடங்களில் கூடி பெரிய அளவில் போராட்டம் நடத்தினர். அதேபோல் கிறிஸ்தவர்கள், புத்த மதத்தை சேர்ந்தவர்கள் இடைக்கால தலைவர் முகமது யூனுசை சந்தித்து பாதுகாப்பு கோரியுள்ளனர்.

ஏழு லட்சம் இந்துக்கள் குவிந்து போராட்டம் நடத்தி உள்ளனர். இது இந்தியாவை மட்டுமின்றி உலகையே திரும்பி பார்க்க வைத்த சம்பவம் ஆகும். இந்துக்களால் அதிரும் வங்கதேசம் எனவும் சில

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஹொரணையில் பெண் கொலை

## இரு சகோதரர்கள் கைது

ஹொரணை, சிரில்டன்வத்தை பகுதியில் சனிக்கிழமை மாலை பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதையடுத்து, இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அயல் வீட்டில் வசிக்கும் நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக அந்த நபரும் அவரது சகோதரரும் இணைந்து இந்த கொலையை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சிரில்டன்வத்தை - மீவனபலான பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடையவர் ஆவார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் கனன்வில பிரதேசத்தைச் சேர்ந்த 40 மற்றும் 44 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஹொரணை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# மின்சாரம் தாக்கி மாணவன் இறப்பு

## அனுராதபுரத்தில் சம்பவம்

*அனுராதபுரம்-கலென்பிந்துனுவெளபகுதியில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவரொருவர் உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்த மாணவர் கலென்பிந்துனுவெள பகுதியைச் சேர்ந்த 15 வயதுடையவர் எனவும் அப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்பவர் என்றும் கூறப்படுகிறது.*

*தனது வீட்டின் பின்புறம் உள்ள குளியல் அறையில் குளித்துக்கொண்டிருந்தபோது, தண்ணீர் எடுப்பதற்காக மின் மோட்டார் இயக்கப்பட்டுள்ளது.*

*மின் மோட்டாரில் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் அவரது ஆடைகள் வைக்கப்பட்டிருந்த நிலையில், குளித்துவிட்டு ஆடைகளை எடுக்க முற்பட்டபோது மின்கம்பி அறுந்து உடலில் சுற்றியதில் மின்சாரம் தாக்கி மாணவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)*

# பொருளாதார நெருக்கடியால் கரையும் அந்நிய செலாவணி

4ம் பக்க தொடர்ச்சி..........

இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

ஆயினும் உண்மையில் இன்னமும் வங்கதேசத்தின் நிலைமை என்பது




முழுமையாக கட்டுக்குள் வரவில்லை.

**அந்நிய செலாவணி வீக்கம்:**

நீண்ட காலமாக பங்காளதேஷ் ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக அனைவராலும் பார்க்கப்பட்டது. ஒரு ஏழை நாடாக இருந்தது. ஆனால் ஆசியாவில் எழுச்சி பெறும் பெருளாதாரப் புலிகளில் ஒன்றாக அண்மையில்தான் வளர்ச்சிபெற்றது.

தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தி யாவுக்கு மேலாக உயர்ந்து வரும் நிலையில் இருந்த வங்க தேசம் மீண்டும் பெரும் பொருளாதர வீழ்ச்சியை அடைந்துள்ளமை பரிதாபத்திற்குரியது.


இது பங்களாதேஷுக்கு கூடுதல் பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளது. ஏனென்றால் அந்நிய செலாவணி போதிய அளவில் கையில் இருந்தால்தான் பிற நாடுகளில் இருந்து வர்த்தகத்துக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். பெட்ரோல், டீசலை பெற முடியும். இதனால் வங்கதேசத்தில் அந்திய செலாவணி கையிருப்பை மேற்கொண்டு சரிய விடாமல் தடுக்க வேண்டும்.

மேலும் பங்களாதேஷ் மத்திய வங்கியும் பணக் கட்டுப்பாட்டை விடுத்துள்ளது. மக்கள் தங்களின் வங்கி கணக்கில் இருந்து எடுக்கக்கூடிய பணத்திற்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.. ஒரே நேரத்தில் பொதுமக்கள் 2 லட்சம் டாக்கா வரை மட்டுமே வங்கிகளில் இருந்து எடுக்க முடியும். இதனால் நாட்டின் வணிக துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பணப்புழக்கமின்றி வணிக துறை செயல்பட்டு வருகிறது. இதனால் இடைக்கால அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இடைக்கால அரசின் தலைவராக உள்ள முகம்மது யூனுஸ் நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கலை சரி செய்ய கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

ஏனென்றால் பங்களாதேஷ் நாட்டில் தற்போதைய நிலை நீண்டகாலம் தொடரும் பட்சத்தில் அந்த நாடு முழுமையாகப் பழைய நிலைக்குக்கூடச் செல்லலாம். மேலும் அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தற்போதைய நிலையில் பொருட்களை கொண்டு செல்வதில் பிரச்சனை உள்ளதால் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷை பொருத்த வரை பருப்பு வகைகள், உலர் பழங்கள், மசாலா பொருட்கள் உள்பட பிற அத்தியாவசிய பொருட்கள் அண்டை நாடுகளில் இருந்து செல்கிறது. ஆனால் தற்போதைய போராட்டத்தால் இந்தியாவில் இருந்து அங்கு செல்லும் பொருட்களின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் வரும் நாட்களில் சமையல் பொருட்களின் விலை என்பது அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் பங்களாதேஷ் தற்போது இக்கட்டான சூழலில் சிக்கி உள்ளது.





காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி குளங்களை பாதுகாக்க எல்லைக்கற்கள் தயாராக உள்ளபோதும் திணைக்களம் தயாரில்லை

## பொது மக்கள் குற்றச்சாட்டு



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான குளங்களை பாதுகாக்கும் பொருட்டு அவற்றிற்கு எல்லை கற்கல் இட்டு அடையாளப்படுத்தும் நடவடிக்கைகளுக்குஎல்லைகற்கள் கொள்வனவு செய்யப்பட்டு தயாராக உள்ளபோதும் அவற்றைக் கொண்டு குளங்களுக்கு எல்லையிடுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தயாராக இல்லாதிருப்பது கவலையளிக்கிறது என பொது மக்கள்கவலைதெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் சில குளங்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. இதில் கிளிநொச்சி குளம் அதன் பின்பகுதியில் பெருமளவுக்கு ஆக்கிரமிக்கப்பட்டு மதில்கள் அமைக்கப்பட்டு கட்டடங்களும் கட்டப்பட்டுவிட்டன.

கனகாம்பிகைகுளம் அதன் பின்பகுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 25 ஏக்கர் வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிது புதிதாக சிலர் மண் நிரப்பி குளங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். இது எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தம் உட்பட மிக மோசமான சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும். அருகிச் செல்லும் நிலத்தடி நீரையும் இல்லாது செய்துவிடும். எனவே இதனைக் கருத்தில் கொண்டு குளங்களை பாதுகாக்க வேண்டும்.

அதற்கமைய, குளங்களுக்கு எல்லையிடுதல் அவசியமாகும். வனவள திணைக்களம் தங்களின் காடுகளை பாதுகாக்க எல்லை கற்களை பதித்தது போன்று குளங்களுக்கும் எல்லை கற்களை பதிக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கற்கள் தயார் நிலையில் உள்ள போதும் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருப்பது கவலைக்குரியது.

எனவே இனியாவது குளங்களை பாதுகாக்கும் அக்கறையுடன் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்எனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.(05)

# தமிழ் மக்களுக்கு காலம் இட்ட கட்டளையே பொது வேட்பாளர்

## ஐங்கரநேசன் கூறுகிறார்




முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரைக்கும்தமிழ்த் தேசிய உணர்வோடு தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்னர் சிதறடிக்கப்பட்டார்கள். அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பிரதேசம், சாதியம், சமயமாக தமிழ்த் தேசியம் துண்டாடப்பட்டு வருகிறது. இவற்றால் அரசியல் ரீதியாகத் தமிழினம் மிகவும் பலவீனமாகத் பின்தள்ளப்பட்டுள்ளது என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே தமிழ் மக்களைத் தேசமாக மீண்டும் திரளச் செய்து அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த முடிவு காலம் இட்ட கட்டளை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேத்திரனுக்கும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதானிகளுக்கும்இடையிலானகலந்துரையாடல் சனிக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான முடிவு. இதனைப் புரிந்துகொள்ள விரும்பாதவர்கள் வெல்ல முடியாத தேர்தலில் எதற்காக போட்டி என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். எண் ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாக சிங்கள மக்களைக் கொண்ட இலங் கைத் தீவில் தமிழன் ஒருபோதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது. ஆனால், தமிழ் மக்களை மீளவும் தேசமாகத்திரளச்செய்வதில் அவர் வெற்றி பெறுவார்.

தென்னிலங்கைவேட்பாளர்களிடையேநான்கு முனைப் போட்டி நிகழும் நிலையில் பொதுவேட்பாளர்தங்களின்வெற்றிவாய்ப்பைப்பாதிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ள தரப்புகளுடன் பேச வருமாறு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுக்கிறார்கள்.

அதே சமயம் அவர்களுடன் நேரடியாகவும் பின்கதவாலும் தொடர்புகளைப் பேணிவருகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் மூலம் பொதுவேட்பாளருக்கு எதிரான மூர்க்கத்தனமான கருத்துகளும் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவேட்பாளர் துரோகியாகக் கூடச் சித்திரிக்கப்படுகிறார்.

பொது வேட்பாளர் பற்றித் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்பே முடிவெடுக்கலாம் என்றும் அவர்களுடன் பேரம் பேசலாம் என்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றார்கள்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச தீர்வையேனும் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போது கூடச் செய்ய விரும்பாத தென்னிலங்கை தலைமைகளுடன் தேர்தல் நேரத்தில் பேச முற்படுவது அவர்களின் வெற்றி வாய்ப்பை உறுதி செய்வதற்கான ஓர் உத்தியே ஆகும். பொது வேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளின் பின்னால் உள்ள கபடத்தனங்களை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.(05)



## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது யாருக்கும் தெரியாமல் நடு இரவில் கொழும்பிலிருந்து குப்பைகளை இவ்வாறு ரயில் மூலம் புத்தளத்திற்கு கொண்டு வருவது பிழையான நடவடிக்கை என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று 'கிளீன் புத்தளம்' அமைப்பினர் தெரிவித்தனர்.

## அரியநேந்திரன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளரை முன்னிறுத்தி என்ன கோரிக்கையை முன்வைக்கப் போகிறோம் என்பதே முக்கியம். இனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு இல்லை. அது இனியும் கிடைக்கப்போவதில்லை. எனவே தமிழ் மக்களாகிய நாம் இலங்கைக்குள் எமக்கு தீர்வு இல்லை என்பதனை சர்வதேச சமூகத்துக்குச் சொல்லவேண்டும்.

நாங்கள் தேசியம் தாயகம் சுயநிர்ணய உரிமை பற்றி தந்தை செல்வா காலத்தில் இருந்து பேசி வருகிறோம். அதனால் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்றுகட்சிகள்அதனைதீர்மானிக்க முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை பொது வாக்கெடுப்புமூலமேஅறியமுடியும்.

பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டியது சர்வதேச சமூகம். ஆனால்நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பொது வாக்கெடுப்பாக அமையாது. இருந்தாலும் அதனை பயன்படுத்தி எமது கோரிக்கையை நாம் சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

மக்கள் தமக்கு எது தேவை என்பதனை அவர்கள் தீர்மானிப்பார்கள். வாக்கெடுப்புக்கள் எதுவும் இல்லாமல், இதுதான் இவர்களுக்கு தேவை என கட்சிகள் முடிவெடுக்க முடியாது. எனவே சர்வஜன வாக்கெடுப்பு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவேண்டும்.அவ்வாறான கோரிக்கை இல்லாமல் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் அர்த்தம் இல்லை.

கேட்கவேண்டியதை கேட்காது, ஒளித்து மறைத்து தமிழ் பொது வேட்பாளர்செயற்படுவாராயின்நாம் கடுமையாக அதனை எதிர்ப்போம்.

தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும். அதில்ஒளித்துமறைத்து விடயங்கள் சொல்லப்பட்டால் நாம் கட்சியை கூட்டி, என்ன முடிவெடுக்க வேண்டும் என தீர்மானிப்போம்.

தமிழ் அரசு கட்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் சவால் விடுகிறேன். சுயநிர்ணய உரிமை என்பதனை எப்படி பிரயோகிக்கப் போகிறீர்கள்? வாக்கெடுப்பு இல்லாமல் அந்த மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதனை நீங்கள் எப்படி தீர்மானிப்பீர்கள்? தமிழ் அரசுக் கட்சிக்கு முதுகெலும்பு கிடையாது.

சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். நாங்களும் தொடர்ந்து ஏமாந்து கொண்டு இருக்க முடியாது. ஏமாற்றங்கள் போதும் என்றார்.

## நடந்ததைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க் கட்சித் தலைவர் மறைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்த நாள் நினைவு நிகழ்வில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். நிகழ்வு சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழர்கள் நேற்று விழுந்த இடத்தில் இன்று விழுந்துவிடாதீர்கள். புதிய இடத்தில் அல்லது முன்னுக்காவது வீழ்ந்து பாருங்களேன். விழுந்துவிடக்கூடாது என்று கூறுகின்றோம். நாங்கள் உங்களைகீழேவிழவிடமாட்டோம். அதற்காகத்தான் எங்களைப் போன்றவர்கள் இருக்கிறோம்.

அதற்காக புதிய இடத்துக்கு செல்வதல்ல, வீழ்ந்துவிடக்கூடாது என்பதை கூறுகின்றேன். இந்த நிகழ்வின் நோக்கம் என்ன? அடுத்த செயல் வடிவத்தை புத்தாக்கத்தை பெற்றாகவேண்டும். வேர்களைத் தேடித்தான் விழுதுகள் செல்லவேண்டும். வேர்கள் பாதுகாப்பாக இருப்பதால்தான் விழுதுகள் தேடிவந்திருக்கின்றன. எனவே விழுதுகள் பழுதில்லாமல் இருக்கவேண்டுமானால்பழுதில்லாத விழுதுகளைஉருவாக்கவேண்டும். என்றால், அது வேருக்கு பெருமை. அதனை செய்திருக்கிறார்கள்.

ஆனால் பல நேரங்களில் விழுதுகள்வேர்இருக்கிறதுஎன்பதை பற்றியே நினைப்பதில்லையே. நடந்ததை நடந்ததாக இருக்கட்டும். நாம் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும். வரலாற்றை திருப்பி பார்க்கவேண்டும்.

அதனை பார்த்து திருப்பங்கள் உருவாகவேண்டும். இனம், மொழி, பண்பாடு, கலாசாரத்தை காப்பாற்றிக் கொள்வதற்கு உலகத்தில் பிறந்த அத்தனைதமிழர்களுக்கும்உரிமை உண்டு. நடந்தவற்றை பற்றியே சிந்தித்துக்கொண்டு இருக்காமல், அடுத்து எமது உரிமைகளை பெறுவதற்காக நம்மை நாம் எப்படி தயாரித்துக்கொள்ளவேண்டும் என்ற உணர்வில் பக்குவம் பெறவேண்டும்.

இளைய தலைமுறைக்கு பொன்னான காலத்தை வழிகாட்ட வேண்டும். கலங்கரை வெளிச்சங்கள் இல்லாவிட்டால் கப்பல்கள் கடலில் பயணம் செய்ய முடியாது. இன்று நினைவுகூரப்படும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்எல்லோரையும் அணைத்துச் சென்றார். வெளிநாட்டுதலைவர்கள், இந்தியதலைவர்களுக்கு அவர் மையப்புள்ளியாக இருந்தார்.

ஏற்கனவே பல குருதிச் சகதிகளைக் கண்டுவிட்டோம். அதனைஅழித்துவிட்டுச்செல்லலாம் என்று நினைத்துவிடக்கூடாது. பல இழப்புகளை சந்தித்தோம். கடந்து செல்லமுடியாது. அதிலிருந்து என்ன பாடத்தை கற்றோம் என்பதை பற்றி ஆழமாக சிந்திக்கவேண்டும்.

இத்தகையநேரத்தில்அவர்வேறு நான்வேறு என்று எது பிரிக்கிறதோ, அதனை முன்னிலைப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பது என்னுடைய கருத்து - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், இலங்கை தமிழ் அரசு கட்சி தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமசந்திரன், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல்வாதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமைமாலைநாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அவர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு பலர் என்னிடம் வினவும் ஒரு வினா, இம்முறை ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிக்கப்போகிறீர்கள் என்று கேட்கின்றனர். பலமான பல அழுத்தங்களைகொண்டதும்மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் சமதூரத்தில் வைத்து பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறோம்.

தீர்க்கமானமுடிவின்பின்யாருக்கு ஏன் ஆதரவளிப்போம். என கூறிய போதுஅதற்கானகாரணங்களையும் முன்வைப்போம். அதன் பின் நீங்களும் பூரண ஆதரவை அளிக்கலாம். மக்கள் மத்தியில் தெளிவாக காரணங்களுடன் அறிவிப்போம். மூன்றுவேட்பாளர்களுக்கும் நன்கு தெரியும் எமது மக்களுடைய வாக்குகள் தேவை என்று இதனால் பேரம் பேசும் சக்தியாக அழுத்தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்பதை மத்திய செயற்குழுவிற்கு அறிவித்துள்ளேன்.

எம்மைபற்றிய நிலவரங்களை சிங்களமக்களுக்கேஅவர்களாகவே புரியக்கூடியவகையில் அறிவிக்க கூடிய நிலை இருக்க வேண்டும் என்பதை தெரிவிக்கிறேன் அதன் பின் கட்சி முடிவெடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும் என உங்களிடம்கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## ஜனாதிபதியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமானமயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

பொகவந்தலாவ பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உறையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்ததாவது:

மலையகத்தில் இந்து வந்தால் ஆயிரம் ரூபாய் அல்லது 1,700 ரூபாவை கோருவார்கள் அல்லது 1,350 ரூபாய்க்கு கீழ் இறங்கி அதற்கு பேச்சு மேற்கொள்வார்கள். வர்த்தமானி வெளியிடப்படும் மேடைகளில் பேசப்படும் ஆனால் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இறுதியில் சம்பளம் மாத்திரம் கிடையாது.

எமது மக்களின் பிரச்சினை 1,700 ரூபாய் சம்பள பிரச்சினை மாத்திரம் அல்ல 1,700 ரூபாய் சம்பளத்தோடுதொடர்புடையவர்கள் ஒரு இலட்சம் அளவானவர்கள். அதற்கு அப்பால் 15 இலட்ச்சம் சனத்தொகை வாழுகின்றோம். இவர்களுக்கானபிரச்சினைபல்வேறு பிரச்சினைகள் இருக்கிறது. இதனை எப்படி எந்த மொழியில் சொல்ல வேண்டும் என்பதை மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை வேட்பாளராக உங்களுக்காக இலங்கையில் நடைபெற கூடிய ஜனாதிபதி தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரோடும் விவாதத்திற்கு தயாராக உள்ளேன்.

மலையகத்தில் அறிவார்ந்த அரசியல்உரையாடலைமலையகத்தில் ஏற்படுத்த வேண்டும். மலையகத்தில்என்னநடக்கிறதுகடந்தவாரம் ஒரு தனியார் தொலைகாட்சியில் இடம்பெற்றது. அறிவார்ந்த அரசியல் கலந்துரையாடல் அல்ல எமது தலைவர்கள் பேசிகொண்ட சொற்பிரயோகம். நாம் இதற்கா வாக்களித்தோம். யார் என்னத்தை வைத்துள்ளார்கள். இதுதான் இவர்களுடைய பிரச்சினை மக்களுக்கு எதனைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றோம் என்பது அவர்களின்உரையாடலில்இல்லை.

பாரா அல்லது குடுவா என சாதாரண மக்கள் சண்டையிட்டுக் கொள்ளவில்லை எமது முன்னாள் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். இவ்வாறு எதற்கு உரிமையாளர்கள் என்று சண்டையிட்டு கொள்பவர்கள் எமது மக்களுக்கு எந்த உரிமையை பெற்றுகொடுப்பதற்காகச் சண்டையிட்டுகொள்ளுவதில்லை.இவர்களின் சண்டைகள்அனைத்தும்அவர்களின் உரிமைகள்தொடர்புபட்டதுஎன்றார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்கஇதனைக்குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய ரணில் விக்ரமசிங்கவிற்கு இலங்கையைக் கட்டியெழுப்பும் பணியை மேற்கொள்ளஜனாதிபதித்தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கும் அவரின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கும் ஐ.தே.க ஆதரவாளர்களின் உடன்பாட்டை தெரிவிப்பதற்கான பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கேபண்டாரவினால் கட்சி சம்மேளனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த பிரேரணையை ஐ.தே.க தேசிய அமைப்பாளர் சாகல ரத்னாயக்க வழிமொழிந்தார். அதனையடுத்து அனைவரும் கைகளை உயர்த்தி ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இதன்போதுமறுசீரமைக்கப்பட்ட சிறிகொத்த கட்சி தலைமையகமும் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

நான் எதற்காக ஜனாதிபதி பதவியைஏற்றுக்கொண்டேன். 1946 ஆற்றிய உரையில் இலங்கையை பாதுகாத்தால் மாத்திரமே ஐக்கிய தேசிய கட்சியின் இருப்பு பாதுகாக்கப்படும் என்று டீ.எஸ். சேனநாயக்க கூறினார். எனவே ஐக்கிய தேசிய கட்சியினர் என்ற வகையில் டட்லி சேனநாயக்கவும், ஜே.ஆர்.ஜயவர்தனவும், பிரேமதாசவும் எமக்கு அதனையே கற்பித்தனர்.

அதனால் இலங்கையன் என்ற வகையிலேயே நாட்டை காக்க ஜனாதிபதி பதவியை ஏற்றேன். அது தவறா? நீங்கள் வரிசைகளில் நிற்பதை கண்டேன். அந்த நேரத்தில் வரிசையில் மக்கள் அல்லல் பட்டதை கண்டேன். பிரச்சினைகளுக்குதீர்வு வழங்கினேன். அதனைசெய்யாமல் ஜே.வி.பி.யும், ஐக்கியமக்கள்சக்தியும் சாபத்தை தேடிக்கொண்டுள்ளன.

சஜித்பிரேமதாசஉள்ளிட்டவர்கள் பிரேமதாசஜனாதிபதியுடன்பணியாற்றியவர்கள் இல்லை. அவரைநானே ஐக்கிய தேசிய கட்சிக்கு கொண்டு வந்தேன். கட்சியைப் பாதுகாப்பது பற்றி அவர்களுக்கு தெரியாது. டீ.எஸ். சேனநாயக்கவை பற்றியும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஐக்கிய தேசிய கட்சியினர் முதலில் நாட்டைபற்றியேசிந்திக்கவேண்டும்.

பொருளாதாரத்தைப்பாதுகாக்க3 பில்லியன்டொலர்கள்தேவைப்படும் என்பதை 2020 ஆம் ஆண்டு தேர்தலில் நான் வெளிப்படையாக கூறினேன். ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பி.யும் அதனை சொல்லவில்லை. அதனால் நான் தோற்றுப்போனேன். ஆனால் பிரச்சினையின் தன்மையை நான் அறிந்திருந்தேன். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி உதவிகளைக் கோரினேன். அந்த உதவியுடன் மீண்டுவர முடியும்என்றநம்பிக்கை எனக்கு இருந்தது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷநாட்டைவிட்டுச் சென்றதும் எவரும் நாட்டை ஏற்க வரவில்லை. சபாநாயகர்தலைமையிலான குழுவை அமைக்கச் சொன்னார்கள். எனக்குஉதவமறுத்தார்கள். டலஸ் அழகப்பெருமவிற்கு ஆதரவளித்தார்கள். தாம் ஐக்கிய தேசிய கட்சியினர் இல்லை என்று நிரூபித்தனர். பிரேதமதாச ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோதும் நானே முன்வந்து அவரைப்பாதுகாத்தேன். அவர் மரணித்த போதும் அந்த இடத்திற்கு நானே உடனடியாக சென்றுப் பார்த்தேன். அவர்கள் அவற்றை மறந்துவிட்டனர்.

கட்சியைப் பாதுகாக்கவே நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன். 1971 களில் ஜே.வி.பிகலவரம்ஏற்பட்டகாலத்தில் அரசாங்கத்துக்கு பக்கபலமாக நிற்க தீர்மானித்தோம். அப்போதும் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்றஎண்ணமேஎமக்கு இருந்தது. 1989 களில் மீண்டும் அந்த கலவரம் வந்தபோதும் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கு அனுருத்த ரத்வத்தவுடன் வருமாறு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பையேற்று அவரும் வந்தார். இராணுவத்தின் உதவிகளை வழங்கவும் இணங்கினார். அப்போதைய ஜனாதிபதி பிரேமதாச இறந்த பின்பும் அவர்கள் கட்சியிலிருந்து எந்தவொரு வேட்பாளரையும் களமிறக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி அலுவலகத்திற்கே வந்து அறிவித்தார். அப்படியொரு நல்ல ஒற்றுமை எம்மிடையே காணப்பட்டது.

அவற்றைப்பற்றிதெரியாதவர்கள் வெளியில்சென்றுகூச்சலிடுகிறார்கள். அவர்கள் தான் நெருக்கடி வந்தபோதும் ஓடி மறைந்தனர். அருகிலி ருந்த கழிப்பறையை தேடி ஓடினர். நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். நாட்டை சீர்ப்படுத்த எனக்கு ஒரு குழு தேவைப்பட்டது. அதற்காக ரஞ்சித் சியம்லாபிட்டிய, ஷெஹான்சேமசிங்க, அலி சப்ரி , கஞ்சன விஜேசேகர இவர்களோடு பணியாற்றினேன். அந்த முயற்சிகள் வெற்றியளித்தன.

பிரதமர் பாராளுமன்றத்தை வழிநடத்தினார். மனுஷவெளநாட்டு துறையை பாதுகாத்தார். ஹரீன் சுற்றுலா துறையை பலப்படுத்தினார். நிமல் சிறிபால டி சில்வா விமானத்துறையைபலப்படுத்தினார்.

உலக வங்கி ஜஎம்எப் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் 18 கடன் வழங்கியநாடுகளுடன்பேசினோம். தற்போது அவர்களுடனான ஒப்பந்தத்துடன் செயற்படுகிறோம். எமக்குகஷ்டமான காலம் இருந்தது. பணத்தை அச்சிட முடியவில்லை. கடன்பெறமுடியவில்லை. அதற்கான வரியைஅதிகரித்து, கட்டணங்களை அதிகரித்து வருமானத்தை அதிகரித்தோம். அந்த சுமைகளைத் தாங்கிய மக்களுக்கு நன்றி. இன்று சுமை குறைநதிருக்கிறது.

இன்றுமின்,கேஸ்கட்டணங்கள் குறைந்துள்ளன. சுமைகள் ஓரளவிற்கு குறைந்துள்ளன. ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்தியபின்னர் ஏனைய சலுகைகளை வழங்குவோம். மேற்கூறிய ஒப்பந்தங்களின் இலக்குகளையும் அடைய வேண்டும். அவற்றை அடைந்தால் நாடு வலுவடையும். அதுவே அரசாங்கத்தின் திட்டமாகும்.

எதிர்கட்சியினர் பொருட்களின் விலையை குறைப்பதாகச் சொல்கிறார்கள். வரியைகுறைத்தால் வருமானம் குறையும். அதனால் நாம்மீண்டும்2022ஆம்ஆண்டின் நிலைக்குச் செல்ல வேண்டும். எனவே ரூபாயின் பெறுமதியை அதிகரித்த பின்னர் வரியை குறைப்பதே நல்லதாகும்.

நாம் இரவில் விழுந்த குழியில் பகலிலும் விழக்கூடாது. கோட்டாபய ராஜபக்ஷவும் ஐ.எம்.எப் பேச்சை கேட்காமலேயே வரியைக் குறைத்தார். அதனால் ஒப்பந்தங்களை மாற்ற வேண்டுமானால் மீண்டும் 18 நாடுகளுடனும் பேச வேண்டியிருக்கும். அதனால் எதிர்க்கட்சிகள் பொய் சொல்கிறார்கள் என்பது தெரிகிறது. எதற்காக பொய் சொல்கிறார்கள் என்பதே எனது கேள்வியாகும். இந்த முயற்சிகளை மேற்கொள்ள எமக்கு இரு வருடங்கள் தேவைப்பட்டன. இந்த ஒப்பந்தங்களை மாற்ற எந்த தரப்பும் இணக்கம் தெரிவிக்காது.

சர்வதேச நாணய நிதியம் நினைத்தாலும் அதனை தனியாக செய்ய முடியாது. கிரேக்கத்திலும் இதுவே நடந்தது. அந்த நாட்டில் பொருளாதாரம் சரிவடைந்தது. அப்போது அந்த நாட்டின் எரிக்கட்சி போலி வாக்குறுதிகளை வழங்கி தேர்தலை வென்றது. ஐ.எம்.எப் நிபந்தனைகளை மாற்றுவோம் என்றது. அந்த நிபந்தனைகளை மாற்ற பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்துவதாகவும் அந்நாட்டில் புதிய பிரதமர் மேற்படி அமைப்புக்களுக்கு அறிவித்தார். ஆனால் மறுதினமே அந்த அமைப்புகள் நிபந்தனையை மாற்ற முடியாதென அறிவித்தன.

ஆனாலும் அந்த நாட்டில் ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பின்னர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததன் விளைவாக அந்த நாட்டின் பொருளாதாரம் முற்றாக சரிந்து போனது. அதனால் அந்த நாட்டின் நிதி அமைச்சர் மீண்டும்

தொடர்ச்சி 10ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# முல்லைத்தீவில் பண்டாரவன்னியனின் 221ஆவது வெற்றி நாள் நினைவுகூரல்







முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டையை போரிட்டுவெற்றிகொண்ட வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 221ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவுகூரல் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பிரதேச சபைஉறுப்பினர் இ.ஜெகதீசன், தமிழரசு கட்சியின் உறுப்பினர் ஜீவன் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டிருந்ததுடன் மரியாதையும் செலுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்தஆங்கிலேயரின் கோட்டையை 1803ஆம் ஆண்டு இதே திகதியில் போரிட்டுகைப்பற்றி, இரண்டு பீரங்கிகளையும் மாவீரன் பண்டாரவன்னியன் கைப்பற்றிய நாளாக இன்றைய நாள் அடையாளப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் நினைவுகூரல் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# மதுபோதையில் பொதுமகனை தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் கைதானார்

## ஊர்காவற்றுறையில் சம்பவம்

குறிகட்டுவான் பகுதியில் மது அருந்திவிட்டு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சனிக்கிழமை பொதுமகனை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப்பொலிஸ் உத்தியோகத்தர் குறிகாட்டுவான் பகுதியில்மதுபோதையில்கடமையில்ஈடுபட்டிருந்தார்.

இதன்போது வீதியால் சென்ற நபரை மறித்து அவருடன் முரண்பட்டு, இலஞ்சம் வாங்க முற்பட்டுள்ளார். பின்னர், அவரை தாக்கியுள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட நபர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன் அடிப்படையில் தாக்குதலை மேற்கொண்ட ஊர்காவற்றுறைபொலிஸ்நிலையத்தில்கடமைபுரியும் இந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஊர்காவற்றுறை பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவர் மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கானநடவடிக்கைகளைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுகளுடன் விமான நிலையத்தில் 4 பயணிகள் கைது



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சிகரெட் பெட்டிகளுடன் இரண்டு



விமானங்களில் வந்த நான்கு பயணிகளை விமான நிலைய சுங்க பிரிவினர் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 138 லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான 462 வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட் பெட்டிகள் சுங்க பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூன்று பயணிகள் வெள்ளிக்கிழமை அபுதாபியிலிருந்து விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த போதே சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் எம்பிலிபிட்டிய பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 23 வயதுடையவர்கள் என்பதுடன் மற்றயவர் அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இவர்களிடமிருந்து பயணப்பைகளில்மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 'மான்செஸ்டர்' சிகரெட்டுகளின் 345 சிகரெட்காா்ட்டூன்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்படடுள்ளன.

இதேவேளை, கைது செய்யப்பட்ட மற்றய பயணி வெள்ளிக்கிழமை சாஜா நகரிலிருந்து விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த போது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் நெலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார்.

இவரிடமிருந்து பயணப் பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மான்செஸ்டர்சிகரெட்டுகளின் 117 சிகரெட் காா்ட்டூன்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி, 92,400 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 462 சிகரெட் காா்ட்டூன்கள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அனைத்து வெளிநாட்டு உற்பத்தி சிகரெட்டுகளையும் சுங்க விசாரணை பிரிவின் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளதுடன் நான்கு பயணிகளும் நான்கு லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர். (05)

# மருதானையில் ரயில் தடம் புரள்வு

மருதானை ரயில் நிலையத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ரயிலொன்று தடம் புரண்டது.

எரிபொருள் ரயிலொன்று தடம் புரண் டதன் காரணமாக ரயில் தண்டவாளங்கள் பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால் மருதானை ரயில் நிலையம் மற்றும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் அனைத்து ரயில்களும் தாமதத்துடன் இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.(05)

# கொழும்பு கொம்பனி வீதி ஏரியில் ஆணின் சடலம் கண்டுபிடிப்பு

கொழும்பு - கொம்பனி வீதியில் உள்ள ஏரியில் ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொம்பனி வீதி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புஞ்சி பொரளை பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடைய நபர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கொம்பனி வீதி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# மின் மோட்டர் திருத்தமுற்பட்ட ஆலய பணியாளர் உயிரிழப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ். சுன்னாகம் - சூளானை பகுதியில் உள்ள ஆலயமொன்றில் பிரசாதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட நபர், வீடொன்றில் மின் மோட்டார் திருத்தச் சென்றபோது மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை உயிரிழந்த நபரின் சடலம் சனிக்கிழமை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் - சூளானை பகுதியைச் சேர்ந்த 53 வயது நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

திருவிழா நடைபெற்று வரும் இந்த ஆலயத்தின் அருகில் உள்ள வீடொன்றில் மின்மோட்டார் இயங்காத காரணத்தால் ஆலயத்தில் பிரசாதம் தயாரித்துக்கொண்டிருந்த நபரை வீட்டின் உரிமையாளர் அழைத்து, மின் மோட்டார் திருத்துமாறு கேட்டுள்ளார்.

அவ்வேளை, அந்த நபர் மின்திருத்த வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் டெஸ்ட்டரை எடுத்துக்கொண்டு வருமாறு வீட்டு உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

அவர் வீட்டினுள் சென்று டெஸ்ட்டர் எடுத்துக்கொண்டு சென்று பார்த்தபோது, மின் மோட்டார் திருத்துவதற்காக வந்த நபர் தரையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும், பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.(05)

# திடீர் மாரடைப்பால் சாரதி சாவு மரத்துடன் மோதி பஸ் விபத்து

அம்பாறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவால ஹிந்த பிரதேசத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தவிபத்து வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸின் சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ள நிலையில் குறித்தபஸ்ஸானது வீதியைவிட்டுவிலகி அருகிலிருந்த மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, பஸ்ஸின் சாரதி இங்கினியாகல வைத்தியசாலையில் சேரிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பரகஹகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சாரதி ஏற்கனவே சுகவீனமுற்று இருந்துள்ள நிலையில் பஸ்ஸில் பயணிக்க வேண்டாம் என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ள போதிலும் வேறு சாரதி இல்லை என்பதால் இவர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின் போது, பஸ்ஸில் சுமார் 40 பயணிகள் பயணித்துள்ள நிலையில் ஒரு பயணிக்கு மாத்திரம் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# பீடி இலை பொதிகள் புத்தளத்தில் மீட்பு





புத்தளம் , கல்பிட்டி, கப்பலடி கடற்கரை பகுதியில் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாகக்கொண்டுவரப்பட்டபீடி இலைபொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த பீடி இலைபொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, 776 கிலோ கிராம் நிறையுடைய பீடி இலைகள் அடங்கிய 24 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைபொதிகள் மேலதிக விசாரணைகளுக்காகக் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.(05)

# எனது தந்தை, பாட்டனார் போல மக்களுக்கு இனமத பேதங்கள் இன்றி சேவைசெய்வேன்

## ரிஸ்லி முஸ்தபா உறுதி

(எஸ்.அஷ்ரப்கான், எம்.என்.எம்.அப்றாஸ்)

இன மத பேதங்களுக்கு அப்பால் எனது தந்தை, பாட்டனார் போல மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் என்று ரிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் மாபெரும் எழுச்சி மாநாடு 'புதிய யுகம் நோக்கிய பயணம்' எனும் தொனிப் பொருளில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் சனிக்கிழமை இடம் பெற்றபோது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்ட, சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இன்றைய கட்சியின் அதிவு ஏற்பட உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் என பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் மேலும் தனதுரையில் குறிப்பிடும் போது –

எனது தந்தை மர்ஹூம் மாயோன் முஸ்தபாவின் திட்டங்களில் ஒன்றான அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்ட இளையோருக்கான வேலைவாய்ப்பு, அம்பாறை மாவட்ட இளைஞர்களுக்கான நவீன வசிதிகள் கொண்ட தொழினுட்ப கல்லூரி, நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம்








மேலும் பல இளையோருக்கான தேவைப்பாடுகள் மக்கள் நலன் சார் இதர சேவைகள் என்பன இன்ஸா அல்லாஹ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிசாத் பதியுதீனின் உதவியுடன் மேற்கொள்வேன்.

அம்பாரை மாவட்டத்தில் என்னை பல கட்சிகள் அழைத்தன. ஆனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கை சரியான பாதையை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை என்னிடம் உண்டு. அதனால்தான் நான் ஏ.சி.எம்.சி கட்சியில் இணைந்து பயணித்து சேவையாற்ற உள்ளேன்.

இதற்காக இளைஞர்கள் என்னோடு ஒன்று சேர்ந்து பயணிக்க முன்வர வேண்டும். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் எமது அரசியல் பயணத்தில் இணைந்து கொள்வதற்காக வந்திருக்கின்ற இளைஞர்களை பார்க்கும்போது மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். இது என் மீதும் எமது கட்சியின் தலைமை மீதும் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு என்று நான் நம்புகின்றேன். அதுபோன்று எனது எதிர்கால அரசியல் பயணத்தில் இளைஞர்களுக்கான சிறந்த எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்க நான் முன் நின்று உழைப்பேன்.

எனவே, நாம் இளைஞர்கள் ஒன்றிணைந்து கட்சித்தலைமையின் கைகளை பலப்படுத்துவதோடு, எமது உரிமைகளை, தேவைகளை பெற்றுக் கொள்வதுடன் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக இன மத பேதமின்றி நாம் ஒன்றிணைவோம் என்றும் கூறினார். (05)

# கிளிநொச்சி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதி இயக்கச்சி பகுதியில் வெள்ளிக்கிழமை புத்தளத்தில் பீடி இலை பொதிகள் மீட்பு!

இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு பஸ் ஒன்று குறித்த பகுதியில் பயணிகளை ஏற்றி சென்றபோது வீதியால் சென்ற ஒருவர் திடீரென பஸ்ஸை வழிமறித்து ஏற முற்பட்ட வேளை பஸ் சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. (05)

# கண்டியில் பஸ் மோதி வயோதிபர் உயிரிழப்பு

கண்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் மணிக்கூண்டுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கடுகண்ணாவையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்றில் இருந்த வயோதிபர் ஒருவர் குறித்த பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியை கடக்க முற்பட்ட போது அதே பஸ்ஸில் மோதி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கார் – வான் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவர் காயம்





மாகோல – சபுகஸ்கந்த பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

காரொன்று எதிர்த்திசையில் பயணித்த வானுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

கார் சாரதி உறங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்விபத்தில் காயமடைந்த வான் சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

# 7 வயது சிறுவன் துஸ்பிரயோகம் ஹிஸ்குருகடவயில் முறைப்பாடு

ஏழு வயது சிறுவன் இளைஞர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தரம் 2 இல் கல்வி கற்கும் 7 வயதுடைய சிறுவனே பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சிறுவனின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் வீட்டுக்கு அருகில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் வீடொன்றில் பணிபுரியும் மேசனின் உதவியாளர் ஒருவரே இந்த சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இந்த சிறுவனை பல முறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சிறுவன் வைத்திய பரிசோதனைக் காக பசறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, சிறுவனை பாலியல் துஷ் பிரயோகம் செய்ததாக கூறப்படும் இளைஞனை கைது செய்வது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஹிங் குருகடுவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# நாட்டில் குரங்கம்மை தொற்றை கண்டறிய விசேட நடவடிக்கை

## அறிகுறிகள் தொடர்பில் எச்சரிக்கை

நாட்டில் குரங்கம்மை நோய்த் தொற்று பரவலை கண்டறிய விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ளடங்கக்கூடிய வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், இவ்வாறு நோயாளிகள் பதிவானால் அவர்களுக்கு கொழும்பு தொற்று நோய் ஆய்வுப் பிரிவில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நோய்த் தொற்றாளரின் காயத்தை தொடுவதன் மூலமோ நீண்ட காலமாக நோய்த் தொற்றாளர் சுவாசிக்கும் காற்றை சுவாசிக்க நேரிட்டாலோ இந்த நோய்த் தொற்று பரவக்கூடிய சாத்தியம் உண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த நோய்த் தொற்று வேகமாக பரவக்கூடிய அபாயம் கிடையாது எனவும், தொற்று நோயாளியின் படுக்கை விரிப்பு மற்றும் ஆடைகள் ஊடாகவே இந்த நோய்த் தொற்று பரவக்கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குரங்கம்மை பாதித்த நோயாளிகளிடம் காய்ச்சல், தோலில் கொப்புளங்கள் உள்ளிட்ட நோய் அறிகுறிகளை காண முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

## சர்வதேச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர்களின் நிபந்தனைகளுக்கு இணங்கினார். ஆனாலும் நாட்டில் 13 வீதமாக காணப்பட்ட வரியை 23 சதவீதமாக அதிகரிக்க வேண்டிய நிலை வந்தது.

அதனால் நமது நாட்டிலும் எதிர்கட்சியினர் என்ன செய்ய போகிறார்கள் என்பதை வெளிப்படையாக கூற வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டதன் பலனாக எமக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மாதாந்தம் 700 மில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதற்கு ஜப்பானும் உதவிகளை வழங்குவதாக கூறியுள்ளது.

தற்போது நம்மிடம் இருக்கும் பணம் ஜனவரி வரையில் போதுமானதாக இருக்கும். ஒக்டோபர் மாதத்தில் அவர்கள் நாட்டுக்கு வந்து நாட்டின் நிலையை ஆராய்வர். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியிலிருந்தால் இதனை முன்னோக்கி கொண்டுச்செல்லும் விதம் குறித்து பேசுவோம். ஜே.வி.பியும், ஐக்கிய மக்கள் சக்தியும் என்ன சொல்ல போகிறார்கள். இதனைத் திருத்தம் செய்வோம் என்று சொல்லுவார்கள். அதனை கேட்டால் அவர்கள் நிதி வழங்குவதை நிறுத்திவிடுவர். மீண்டும் பழைய யுகத்திற்கு செல்ல வேண்டியிருக்கும். இதனை பேசி முடிக்கவே மூன்று நான்கு மாதங்கள் தேவைப்படும். 5 மாதங்கள் நாட்டு மக்கள் பணமின்றி கஷ்டப்பட முடியாது.

எனவே, எதிர்க்கட்சிகள் அதற்கான மாற்று வழிகளை குறிப்பிட வேண்டும். நாட்டை அழித்துவிட வேண்டாம். மூன்று கட்சிகளும் இணைந்து சர்வதேச நாணய நிதியத்துடன் பேசுவோம். அந்த விடயத்தை முழு நாட்டுக்கும் சொல்வோம். இறுதியில் மூச்சுவிடவும் வரி விதிக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது. மக்களுக்கு உண்மையை சொல்லுங்கள். அதனால் நாட்டு மக்கள் சிலிண்டர் சின்னத்து வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் அற்ற யுகம் மீண்டும் வரும். அதை நினைத்து அழ வேண்டாம் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பரப்புரை பொலிஸார் தலையீடு காரணமாக நிறுத்தம்








(பாறுக் ஷிஹான்)

பொலிஸார் தலையீடு காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரசாரம் இடை நடுவில் கைவிடப்பட்டு தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை முற்பகல் வேளை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான தெளிவூட்டும் துண்டு பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் தலைமையில் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலரும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி வடக்கு - கிழக்கில் துண்டுப்பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதை ஏற்க முடியாது என அம்பாறை - திருக்கோவில் பகுதியில் துண்டுபிரசூரம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தரப்பினருக்கு எதிராக பொலிஸார் இடையூறு விளைவித்துள்ளனர்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு வந்த திருக்கோவில் பொறுப்பதிகாரி தேர்தலை புறக்கணிக்க கோருவது சட்டவிரோதம் எனவும் நல்லிணக்கத்தோடு உள்ள திருக்கோவில் பகுதியில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார். இதன்போது இருதரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதற்கு பதிலளித்த, கஜேந்திரன் எம். பி தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கு முறையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே தாம் வலியுறுத்தியதாகவும் கூறியுள்ளார்.

குறித்த பிரசாரத்தை இப்பகுதி மக்கள் விரும்பவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2024இல் வெளியிடப்பெற்றது